2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: கொரோனா நோய்த் தடுப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக அரசுப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளுக்கு 5 ஆம் வகுப்பு வரை தமிழக அரசு விடுமுறை அறிவித்துள்ளது. தமிழக அரசின் இந்த அறிவிப்பு ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஊட்டச்சத்து மையங்கள், ICDS–க்குப் பொருந்துமா? ஏனெனில், அந்த மையங்களில் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் முன்பருவக் கல்வி, ஊட்டச் சத்து உணவினைப் பெறுகின்றனர். கேரளாவில் அரசு விடுமுறை அளித்திருக்கிறது. எனவே, எளிதில் நோய்த் தொற்று ஏற்படக்கூடிய இந்தச் சூழ்நிலையில், சிறு குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஊட்டச்சத்து மையங்களுக்கும் தமிழக அரசு முழு விடுமுறை அளிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் நோய்த் தடுப்பு பற்றி ஏற்கெனவே ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பெற்றது. அந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முடிவுகளின் அடிப்படையில், நாங்கள் விடுமுறை அறிவித்தோம். இன்று மாலை சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சி முடிந்தவுடனே, எந்தெந்த வகையில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மீண்டும் உயர் அதிகாரிகளோடு, மூத்த அமைச்சர்களோடு கலந்தாலோசிக்கப்படவுள்ளது. இந்தக் கொரோனா வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் அப்போது முடிவு செய்து, நல்ல முடிவு, தாங்கள் எதிர்பார்த்த முடிவு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.